மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்குத்தான் நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கின்றேன். தற்போது, 1-4-2017 ஆம் ஆண்டில் விலைவாசி புள்ளி 799-லிருந்து 766 ஆகக் குறைந்துள்ளதால், 1 புள்ளிக்கு 18 பைசா வீதம், 766 புள்ளிகளுக்கு ரூ.137.88 அகவிலைப்படியாக வழங்கப்படுகிறது. அதன்படி 1-4-2017 ஆம் ஆண்டு அடிப்படை ஊதியம் ரூ.90, அகவிலைப்படி ரூ.137.88, ஆக மொத்தம் ரூ.227.88 ஆக வழங்கப்படுகிறது. இது அரசு தோட்டத் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதியமாகும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, தி.மு.க. ஆட்சியில் ஊதியம் அதிகமாக வழங்கப்பட்டது என்று கூறினார்கள். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலும் இதே நடைமுறையைப் பின்பற்றிதான், அதாவது 1-4-2011 ஆம் ஆண்டில் ரூ.78 அடிப்படை ஊதியமும், 1 புள்ளிக்கு 16 பைசா வீதம் 344 புள்ளிகளுக்கு ரூ.55.04 அகவிலைப்படியும் சேர்த்து ரூ.133.04 ஊதியம் வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2. தகவல் கோரல்-தொடர்ச்சி

(ஆ) கரூர் மாவட்டம், பள்ளப்பட்டியைச் சேர்ந்த திரு. ரிஃபாத் சாருக் தலைமையிலான குழு மிகச் சிறிய செயற்கைக்கோள் உருவாக்கியுள்ளது-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். நீங்கள் ஏதோ சொல்ல வேண்டும் என்று சொன்னீர்கள் அல்லவா? அவற்றைக் கூறுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அண்ணன் அவர்கள் கூறியவாறு, அந்த மாணவர் குறைந்த எடையிலே ஒரு செயற்கைக்கோளைத் தயாரித்து ஒரு சாதனையைப் படைத்திருக்கின்றார். 5 பேர் குழுவாகச் சேர்ந்து அந்தச் சாதனையை செய்திருக்கின்றார்கள். அவர் என்னுடைய கரூர் மாவட்டத்தைச் சார்ந்தவர் என்ற வகையில், அவர்களை சென்ற ஒரு மாதத்திற்கு முன்னரே சென்னைக்கு வரவழைத்து,

அவர்களுக்கு எங்களுடைய மாவட்டக் கழகத்தின் சார்பாக ஒரு இலட்சம் ரூபாய் நிதியைக் கொடுத்து கௌரவித்திருக்கின்றேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கூறியதுபோல், அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் அறிமுகம் செய்து வைத்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

5. அறிக்கை அளித்தல்

திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஏழு பேர் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். குழுக்களின் அறிக்கை அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், அவை உரிமைக் குழுவின் தலைவர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்):** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று மகத்துவமான வாழ்க்கை வாழ்ந்து தான் வாழ்ந்த நாட்களில் தன்னால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லையென்று, அனைத்தையும் அளப்பரிய சாதனையாகச் செய்து முடித்து, நம் அனைவரின் இதயங்களிலும் நீக்கமற என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கிற, மனிதப் புனிதவதி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மலர்ப் பாதங்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியைச் சார்ந்த சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், திரு. எஸ். அம்பேத்குமார், திரு. கே.எஸ். மஸ்தான், திரு. கே.எஸ். இரவிச்சந்திரன், திரு. என். சுரேஷ் ராஜன், திரு. க. கார்த்திகேயன், திரு. பி. முருகன் மற்றும் திரு. கு.க. செல்வம் ஆகியோர் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கையைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.